செய்தி வெளியீடு எண்.1015 நாள்.24.12.2009

**<u>கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – கண்காட்சி அமைப்பு குறித்து மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள் தலைமையில் கண்காட்சி அமைப்புக் குழுக் கூட்டம் இன்று நடைபெற்றது.</u>**

இன்று (24.12.2009) சென்னை தலைமைச் செயலகத்தில், கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010 ஆம் வருடம் ஜூன் 23 முதல் 27 வரை நடைபெறுவதையொட்டி அமைக்கப்பட்ட கண்காட்சி அமைப்புக் குழுவின் கூட்டம் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணைத் தலைவரும் மாண்புமிகு வனத்துறை அமைச்சருமான திரு.என்.செல்வராஜ், தொல்லியல் துறை ஆணையர் டாக்டர் தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இ.ஆ.ப, தனி அலுவலர் திரு.கா.அலாவுதீன், இ.ஆ.ப., திரு.கணபதி ஸ்தபதி, முனைவர் நாகசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.வசந்தி ஸ்டான்லி, திரு.கோபண்ணா, கவிஞர் மு.மேத்தா, கவிஞர். பா.விஜய், திருமதி.தமிழச்சி தங்கபாண்டியன், மத்திய தொல்லியல் துறையில் பணியாற்றும் திருமதி.சத்தியபாமா, புதுச்சேரி மத்தியப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த திரு.கா.இராசன், தஞ்சை திரு.இரத்தினகிரி, சென்னை கவிதா பதிப்பகம் திரு.சொக்கலிங்கம், கோவை விஜயா பதிப்பகம் திரு.வேலாயுதம், கோவை திரு.மா.உமாபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

*****

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.